147






O-, 1MMS5, K.
N32.4
170726

உ

பாரததேவி துணை.

K. V. மீனாக்ஷிசுந்தரம் செட்டியாரவர்கள் இயற்றிய

# காங்கிரஸ் தொண்டர்கள்

# மறியல் பாட்டு.

(நான்காம் பாகம்)

வெண்பா.

சீர்மிகுந்த பாரதியின் சேயர்களாம் தேசமெங்கும்
பேர்மிகுத்த தொண்டர்கள் பேணியே—சீருடன்
செய்திடும் மறியல் தன்னை செப்பிடவருணினையே
செய்திட வெனையே சேர்.

## பாரததேவி துதி.

கற்பிற்சிறந்த எந்தன் (மெட்டு)

பல்லவி.

கதர்க்கொடியேந்திடும் தேவி எங்கள்
ஆவி சஞ்சீவி மேதாவி (கத)

அநுபல்லவி.

மதத்துட வருந்தும் வறுமையிற் பிறந்தேன்
மனமது புண்பட கனவிலும் மெலிந்தேன்
குதித்தெழுந்திடுங் கொடுந்துயர் கடலழிந்தேன்
குண்டுணியாய் திரிய

170726

லாமா கண்ய மாமா
புண்ய [illegible] சரியாமா (கத)

புண்ணிய மிருக்கும் போக பாக்யமும் போச்சே
புரண்டுகண்ணீர் வடித்து புலம்பிடலாச்சே
மனிதப்பிறப்பு யென்ற மருத்துவம் போச்சே

மாடுபோர் லுழைப்பதும்
யேனோ விதிதானோ
சரிதானோ முறைதானோ (கத)

அடிமை என்றதோர் பட்டம் அடைந்தப் போர்க்கே
அடங்கலும் நாமின்னம் கடையா யெப்போதும்
படிமிசை யொருபார மாகமும் போதும்
பலர் நகைத்திட வேசெய்

தாயே எங்கள் தாயே
விரைவாயே யருள்வாயே (கத)

2078
748.0954

---

## கோருங்கள் கோருங்கள் கோருங்களே (மெட்டு)

### பல்லவி.

வாருங்கள் வாருங்கள் வாருங்களே—ஒன்று
சேறுங்கள் சேறுங்கள் சேறுங்களே (வா)

### அநுபல்லவி.

மதுபானத்தை யொழிக்க
மாதுயரை யழிக்க (வா)

8-1MMSS-K
A32-4

சரணங்கள்.

மாணிலத்திலுப்த மானிடரே நீங்கள்
மதுவையருந்தி மயக்கமடைந்து
மண்மேல் பிரண்டு மதியை யிழக்கவும்

விதியோ இது சதியோ
காலகதியோ மிகுசரியோ (வா)

ஒயினுஸ்கி பிராந்தி உண்பதநியாயம்
உத்தமர்களேவுமக் கிதுவென்ன நியாயம்
சத்தியத்தை வெல்ல யாராலே சாயும்

விட்டிடுவீர் கட்குடியை
திட்டமுடன் கட்டுடனே (வா)

பாரதத்தாய் துயரை பக்ஷமுடன் போக்க
பாரிலுள்ள மாந்தர் மனத்துயர் நீக்க
குவலய மாந்தரை குடமுடன் கார்க்க

பாரழிக்கும் குடியதனை
சீரழிக்க யாவருமே (வா)

தூயமனதில் துன்பமுண்டாக்கும்
தொழுதிடும் கடவுள் பக்தியை நீக்கும்
சண்டாளக் குடியால் சகலமும் நீங்கும்

அருமறையின் புகழழிக்கும்
அநியாயக் குடியைவெல்ல (வா)

மாமறை ஓதினும் மறைத்திடும் நீதியை
மானிடர்களுக் கென்றும் தருகுமநீதியை
மானத்தை போக்கும் சொன்னே னச்சேதியை

குடிப்பதாலே — குணமும் போகும்
மடமைநீக்கி — மகிழ்ச்சியுடனே (வா)

காசினிபுகழ் மகான் — காந்தியினுரைப்போல்
கருணைவைத்து குடியை — கழிப்பதுதான்மேல்
காலா கவி மீனுக்ஷி — சுந்தரமுரை கேள்

குடியழிக்கும் — மதுவதனை
கூடியழிக்க — நொடியினிலே (வா)

---

## சொல்லும் வார்த்தையைக் கேளம்மா (மெட்டு)

### பல்லவி.

காந்தி கதரணிவீரையா — மகாத்மாஜி
காந்தி கதரணி வீரையா (காந்)

### அநுபல்லவி.

காந்திசொல் வாக்கை — கருத்தினில் வைத்து
சாந்தியுறகதர் — சந்தோஷ மாயுடுத்தும் (காந்)

### சரணங்கள்.

தேசத்தையே — நாசமாக்கும் வி
தேசத்துணியையே — போக்கும்
க்ஷேமத்தையே — யுண்டாக்கும் நம்
தேசத்துணியையே — நோக்கும் (காந்)

அந்நியத்துணி — யாருக்கடுக்கும்
அணிபவருக் — குண்டுகிருக்கும்
அநியாயமே — லதனலே நஷ்டம்
அவனியில — டைந்தோ ரெதேஷ்டம் (காந்)

இந்தியர்க்காகவே யெடுத்துரைத்தேன்
தந்தான பாட்டு மிதல்லவே தான்
வந்தே மாதா மந்திர சூக்ஷம்
வகுத்தேன் பாரு தொடுத்தேன் நேரே (காந்)

காந்தி கதரையே யணிந்தால்
கண்ணியமிக வண்டுலகில்
காந்தியுட னணிந்தால்
சந்தோஷ மாகு மண் மேல் (காந்)

கொரக் கோட்டை வடிவேலன்
குணமுட னீன்றபாலன்
செக்தமிழ்கவி செப்பும் மீனாக்ஷி
சுந்தரம் வாக்கை சந்ததம் கேளும் (காந்)

---

## கொஞ்சம் சங்கடமா (மெட்டு)

பல்லவி.

கள்ளைக் குடிக்கலாமா இந்த
குவலயத்திலே நிலை குலைத்திடும் (கள்)

அநுபல்லவி.

சள்ளையுண்டாக்கும்மிகு சண்டையாக்கும்
தொல்லை கொடுக்கும்
துயரம் பெருக்கும்
வெள்ளை மதுகுடிவெகு தொல்லையேயறியிது
மானமழித்து
யீனந்தருகும் (கள்)

### சரணங்கள்.

கட்குடியைவிட்டு கடைத்தேராயோ
கட்குடியில் பலர் கஷ்டமடையலேயோ
கருணையுடனுரைபுரிவீர் கள்ளதையே குடியேனென்று

மதுபானம் தரு மவமானம்
பெருயீனம் வரு மஞ்ஞானம்

என்ன மதியோ
தலையின் விதியோ
தெய்வ சதியோ
காலக கதியோ ஐயோ

கடவுள்சாபம் வுனை சாறும் பாபம்
காணல்பரிதாபம் குடியால் உயிர் போகும்
செந்தமிழ் கவி மீனாக்ஷி
சுந்தரமுகரக் குறை பொருப்பீர் (கள்)

---

அற்புதபுதுமையான ரப்பர் தோட்டம் (மெட்டு)

### கண்ணிகள்.

தேசமுன்னேற்றஞ்செயும் கதருடையே—அதை
தேடியுடுத்துவீருந்தனிடையே (தே)

வாசமுறு பாரதியாள் துயர்நீக்க—நீங்கள்
வாங்குங்கள் கதருடை நலமாக (தே)

அந்நியவுடையாற் குற்றமநேக முண்டு—இதை
அறிந்தே யணிந்தால் குணமு முண்டு (தே)

உடைதானும் கதருடை சீமானே—இதை
உடுத்தி யடைகுவாய் பலன் தானே (தே)

அந்நிய ஆடைதனை நீக்கிவிடுவீர்—சுய
ஆட்சிக் குகந்தகதரணிந்திடுவீர் (தே)

கதருடையில்விதம் வேணதுண்டு—இதை
கண்யமுட னணிந்தோம் பண்டு (தே)

காந்தி மகானுரையை கேட்டிடுவீர்—தினம்
கைராட்டினம் தன்னை சுற்றிடுவீர் (தே)

மானிலம் புகழ்தேவி தலைமகனும்—காந்தி
மஹாத்மாஜிக்கு ஜே! ஜே!! ஜே!!!

செந்தமிழ் மீனுக்ஷி சுந்தரம் கவி—இது
ஜெகமதில் ஜொலிக்க ஜே! ஜே!! ஜே!!!

---

## காலக் கோடுமையே (மெட்டு)

### கண்ணிகள்.

கட்குடியினற் காசினியிற் கோடா கஷ்ட மடைந்தவர் கோடி
கஷ்டமதை விட்டு கலப்பீரொன்று இஷ்டமுடன் வாழ கூடி (கட்)

சாடிவதைக்கும் சாராவேண்டா மினி சாராயக் குடியை மேலே
தேடிகுடிக்கில் தேங்கசெயும்புவி தெருவிலிழுத்து மேலே (கட்)

போதை கொடுத்து புகழையழிக்கும்
பொல்லாக் கட் குடியே

பாரிலுள்ளோர் தேடிக்குடித்தால்
பாவ மாகுமறி வாயே (கட்)

தங்கை தமக்கை தாயெனுமுறையை
தாண்டசெயு மந்தக் குடியே

தீண்டவேண்டாமதை தீங்குசெயுமிகு
தீங்கானகட் குடியே (கட்)

பெரியோர் சிறியோர் பேதமொழிக்கும்
பேதமையாம் கட் குடியே

பாழும் குடிதனை பற்றிடாமற் நீங்கள்
புண்ணியந்தேடிற் குடியே (கட்)

ஆண்மை யழித்து அறிவை கெடுக்கும்
ஆகாது பாழுமிக் குடியே

அண்டவேண்டாமதை தெண்டனிட்டேன்
அநியாயம் கட் குடியே (கட்)

செந்தமிழ் மீனாக்ஷி சுந்தரம் கவி
செப்பினேன் புவி மேலே

சீரழிக்குமந்த சீரற்றகுடியே
தீண்டவேண்டாமினி மேலே (கட்)

கந்தனே இந்த கஷ்டனே யேன்படைத்தாய் (மெட்டு)

பல்லவி.

குமரனே! யிந்த—குடியனை யேன்படைத்தாய் (கு)

அநுபல்லவி.

குவலயத்திற் குடித்து
கூறும் புத்தியை விடுத்த இந்த (கு)

170726

சரணங்கள்.

பெரியோர் மதியினை பேணுதவனிவன்
பெரியோர் சிறியோரை பேசியிகழ்பவன்
தருதலையாகவே பிறந்த மடையன்
நாய்போல அலைந்து தினம்
பேய்போல குடித்திடும் (கு)

நித்தமும் கள்ளினை தேடிகுடிப்பவன்
சுத்தவயோக்கியன் சூதினை செய்பவன்
சத்தியம் மறந்த சண்டாளனிவன்
தொள்ளை பெரு கள்ளத்தனை
சள்ளையின்றி குடிக்கு இந்த (கு)

மனைவிமக்களினை மறந்ததிப்பாவி
மதுவைகுடிப்பான் மாண்புடன் தாவி
மீனாக்ஷிசுந்தரம் கவியினை தாவி
இருக்கலாமா குடிக்கலாமா
இழிவு மாமா இதுவு மாமா இந்த (கு)

ஐயா பழனிமலைவேலா (மெட்டு)

கண்ணிகள்:

கள்ளைக்குடிப்பதுமே — பாபம்—அதை
கருதுவோர் செய்கைபரி — தாபம்

சாராயம் குடிப்பது — மேனே—அதை
சார்ந்து குடிப்பதுவிதி — தனே

பாபசெய்கைக்கது — கருவி—அதை
பண்பாய் குடிப்பவன் — கெருவி

பெண்டு பிள்ளைகளையே — மறக்கும்—தம்மை
பெற்றவர் மனதையும் — வெறுக்கும்

பெண்டு பிள்ளைகள்மனந் — துடிக்க—பாவி
போகின்றான் கள்ளினைக் — குடிக்க

எப்போவொழிமிந்தக் — கள்ளே—அழிந்தால்
எப்போது மில்லையே — தொல்லை

தப்பாம் கட்குடிப்ப — தய்யா—நீங்கள்
எப்போதும் குடியாதீர் — மெய்யா

கள்ளைக்குடிப்பதனல் — பாபம்—நீங்கள்
காணுவீர் பின்னலை — நேசம்

மானிலத்தோர் நம்மை — பழிக்க—வீரும்
மதுவை யருந்துவ — தழகோ

செப்பினேனுங்களுக் — மதியே—இதை
தீண்டா திருப்பதுபெரு — நீதியே

செந்தமிழ் கவிபதம் பாடி—மீனாக்ஷி
சுந்தர முரைப்பதை மீறி

காந்தி கருணைகொண்டு நாமே—இனி
கள்ளைகுடியாதிருப் போமே

பாரதமாதாபெற்ற பாலர்களே நமக்கு (மெட்டு)

கண்ணிகள்.

மதுபான பழக்கத்தால் மானிலமே பழிக்கும்
மதுபான பழக்கம் விடில் மானிலமே புகழும்

விட்டிடுவீரே—குடியை
விட்டிடுவீரே (மது)

சாராயக்குடிப்பதுவும் சண்டைகளைமூட்டும்
சதியானக் குடியை சாரவேண்டாமென

வேண்டிக்கொண்டேனே—உமை
வேண்டிக்கொண்டேனே (மது)

அநியாயம் கட்குடியே அவனியோர் யழிப்பார்
அந்நிய யாடைகளும் அகற்றிடவேணுமையே

ஆனந்தம்பாரு—சுயாட்சி
ஆகுமே பாரு (மது)

ஜாதிபேதந்தன்னை சங்கரித்திடுவீர்
நீதியறிந்துநின்றால் நீனிலத்தின் புகழ்வீர்

சொல்வதை கேளும்—மதி
சொல்வதைகேளும் (மது)

கள்ளைக்குடிக்கவேண்டாம் கோர்ட்டில்பணியவேண்டாம்
கள்ளைமிக செய்யும்கள்ளை சாடிடுமிரிப்பொழுதே

சதிமிகசெய்யும்—குடி
மதியினை கொய்யும் (மது)

காந்தி மகானுரையை கருதியே நினை
சாந்தமற்ற குடியை ஜாடிடுவீரென்

கெஞ்சுகின்றேனே—கேட்டு
கெஞ்சுகின்றேனே

செந்தமிழ்கவி மீனுகூறி சுந்தரமுரை யறிந
சந்ததம் மதுவிலக்கை சார்ந்து நின்றல்து

புகழுமாகுமே—கடவுள்
சகாய மாகுமே (மது)

சுயராஜ்ய மதிக தூரமில்லே (மெட்டு)

பல்லவி.

கள்ளைக் குடிப்பதாற் கஷ்டமுண்டறிவீர்
கருணையுடன் மது விலக்கை துணைகொள்வீர் (க)

அநுபல்லவி.

தொல்லைக்குள்ளாக்கு மிந்த கள்ளையானக் குடியை
மெள்ளா தள்ளினிலே புகழுறவீர் (க)

தொகையறு:

கள்ளைக்குடிப்பதாற் களவு கொலையாதி
கஷ்டங்களுண்டாகும்
சள்ளை பெரு கள்ளினையே நாமும்
சாறுதல் பெரும் பாவமே

பாட்டு.

ழுகையினாலே அநியாயக் குடியை
அகற்றிடுவீரே அன்பர்கள் நீரே (க)

தொகையறு.

காந்தி மகானுரைத்த கருத்தையறிந்து
கட்குடியை விலக்குவீர்
எந்தனுரை யெப்போது மனமதில்
இருத்தி துயர் விடுவீர்.

பாட்டு.

பஞ்சமா பாதகம் செய்திடு மக்குடியை
பாழாக்க முன்னே வருவீர்கள்
சஞ்சல மாக்கியே சாகச்செய்யும் குடியே
செஞ்சொல் மீறைகூறி சுந்தரம் சொற்படியே (உ)

தேச பக்தர்

ஸ்ரீயுத, S S. விஸ்வநாத தாஸ் பாடிவருவது.

அடுக்கு மெத்தையிற் படுத்து (மெட்டு)

ராகம் பீலு—தாளம் ஆதி.

சிரைக்குள் புகுந்தமனமே களிப்படையும்
சீலர்க்கில்லை விசனமே—அஞ்சாமல்

அறைக்குள்ளிருந்து தினமே நடுக்கமுறும்
அன்பற் குண்டோ கணமே—இந்நாளில்

தொகையறு.

திருடுவோர் கொலையாதி குற்றங்கள் செய்குவோர்
சிறைசெல்வதால் கேவலம்
தேசாபிமானிகள் சத்தியத்தாற் சிறை
சேர்வதாலூர்க்கே நலம் (சிறை)

பாட்டு.

பட்டமட்டும் பலனுண்டு எனவுரைக்கும்
பழமொழியதனைக்கண்டு—நெஞ்சாரத்
திட்டமென்றமைத்துக்கொண்டு செய்திடுவீர்
தேசத்திற் குறிய தொண்டு—எல்லோரும்

தொகையறு.

தாயார் வயற்றிலே பத்துமாதஞ்சிறை
தனிவாழ்வு வாழவில்லையோ !
சர்க்கார் விதிக்குங் காவல்பாரிலே
தாங்கமுடியாத மலையோ ! (சிறை)

பாட்டு.

கலெக்டரும் கடவுளல்ல அடிமை போலீஸ்
கானிஸ்டேபிள்யமனுமல்ல—உயிரைக்கொல்ல
நிலைத்த சத்தியத்தை வெல்ல பீரங்கிகள்
நீடித்திருக்குமோ சொல்ல—மெய்யாகப்

தொகையறு.

பேடிக்கு நித்தமும் சாவுதான் வீரியம்
பெற்றவர் கொருமரணமே
பெருமையில்லாமலுயிற் வாழ்கின்ற பேதையர்
பிறர்பழிக்கின்ற பிணமே (சிறை)

பாட்டு.

சீதையுஞ் சிறையிருந்து திரும்பிவந்து
சேர்ந்தனள் குறைதீர்ந்து—வகைபுரிந்து
சீதையின் மறைவிருந்து தந்தோன்பிறப்புக்
கேள்வியின் முறைபொருந்து—எப்போதும்

தொகையறு.

சிஷ்டபரிபாலனம் செய்யுமுன் சோதனை
செய்வதே தெய்வ நெறியாம்
செந்தமிழ் பாவலன் பீர்முகமதுயிர் போன்ற
சிலர்சிறை வாழ்வு குறியாம் (சிறை)

சுதேச மறியல் பாட்டு

நான்காம் பாகம்.

முற்றிற்று.

ஸ்ரீ ஆதிமூலம் பிரஸ் சென்னை. (1931.)

120726

## சிவப்பிரகாச பல் பொடி.

இந்தச் சிவப்பிரகாச பல் பொடி மற்ற இதர பல் பொடிகளைப் போலில்லாமல் அதிக சுகந்தமாகவும் பல் வலி, பல்லில் சொத்தை, ஈறு வளர்ந்திருத்தல், வாய்ரணம், வாய்நாற்றம், பல்லாட்டம் முதலிய வியாதிகளை நீக்குவது மல்லாமல், பல் நன்றாய்த் துலங்கும்படி செய்யும். வாயில் சதா கமகம வென்னும் மணத்தை உண்டாக்கிக் கொண்டிருக்கும். ஒருமாதத்திற்கு உபயோகிக்கக்கூடிய பல்பொடி டப்பி 1-க்கு விலை அணா 2. 6-டப்பிகள் அணா 10.

## நாக்குப் பூச்சியை நாசமாக்கும் பில்லை.

இந்த பில்லைகள் ஒருவருடத்துக் குழந்தைகட்கு அறை பில்லையும், மற்றவர்கட்கு 1 அல்லது 2 பில்லைகளும் கொடுத்தால் வயிற்றிலுள்ள சிறு கிருமிகள் யாவற்றும் பந்து பந்தாய் வந்து விடும்.

8-பில்லைகள் விலை அணா 6.

## சர்வதேள் விஷ நிவாரணி சஞ்சீவி.

நண்பர்களேஒவ்வொருவர் வீட்டிலும் தேளினுடைய உபத்திரவம் பொருக்கமுடியாமல் அவஸ்தைப்படுவதை நாம் அனைவரும்பார்த்து விசனமுற நேருவதைப் பற்றியாம் அதிக கஷ்டப்பட்டு இதற்காக உயர்ந்த மருந்து கண்டுபிடித்து இருக்கிறோம். தேள், நட்டுவாக்காலி கொட்டியவுடனே இந்த மருந்தை போட்டால் 1, 2, நிமிஷங்களில் கட்டாயம் விஷம் நீங்கும்.

உபயோகிக்கும் விவரம் மருந்தோடு அனுப்பப்படும்.

இதன் விலை பாக்கெட் அணா 8.

## ஜெர்மனி எய்கோ அத்தர்.

இவை சாதாரண சுதேச அத்தர்களைவிட ஆயிரம்பங்கு மேலானது வேறு ஆங்கில வாசனைகளைப் போல் சாராயசத்து ஆல்கோஹால் சேர்த்துச் செய்யப்பட்டதல்லசெவ்வையாய்மலர்ந்த புட்பங்களின் வாசனையை ரசாயன சாஸ்திர முறையால் இறக்கப்பட்டது அழகும் உறுதியுள்ள கேசில்வைத்து பாக்செய்யப்பட்டது இதில் ஒரு துளி பூசினல்போதும்.

| | | | |
|---|---|---|---|
| 1-டிராம் புட்டி 1-விலை ரூபா | 1 | 0 | 0 |
| அரைடிராம் புட்டி அணா | 0 | 12 | 0 |

---

எமது விலாசம்:—V. R. ஏழுமலைப் பிள்ளை,
189, வால்டாக்ஸ்ரோட், சௌகார்பேட்டை போஸ்டு, மதராஸ்

## எப்படிப் பிழைப்பதென்று நினைத்து

# ஏன் கவலைப் படுகின்றீர்கள்.

மாதம் 50 ரூபா முதல் 500-ரூபா வரை சம்பாதிக்கலாம் எப்படி சம்பாதிக்கலாமென்றால் கைத்தொழில் வணிக ரகசிய சாஸ்திரமென்னும் புத்தகத்தை வாங்கி வாசித்தால் சோப் செய்யும் விதம், பெப்பர்மிட் மருந்துகள், மெழுகுவத்திகள், கூந்தல் வளரும் பரிமளத்தைலங்கள், சாம்பிராணி வத்திகள், நெருப்புப் பெட்டிகள், இதுபோல் அநேக விதமான சாமான்கள் செய்யும்விதம் இப்புத்தகத்தில் அடங்கியுள்ளன புத்தகத்திற்கு முந்துங்கள். விலை ரூ. 1 8 0 தபார்சிலவு 0 8 0

---

### சரீரமர்ம சாஸ்திரம்.

பிரியமதாகவே சரீரமர்மத்தை தெரிந்துக் கொள்ளுங்கள் விலை ரூ 1 0 0 இதில் ஸ்திரீ புருஷ லக்ஷணங்களும் அவர்களது மர்ம ஸ்தானங்களில் அமைப்பும் ஆண் பெண் சிசு உற்பத்தி விபரமும் ஆதியில் எழுதிய இல்லற சிற்றின்பங்களும் அழகிய 64 சித்திரப் படங்களுடன் உள்ளது

### தாய்கிழவிகள் தளுக்கு.

படிக்கப்படிக்க யினிக்கும் ஓர் உயிர்கர தமிழ் நாவல் விலை அணா 8.

### ஆங்கில ஆசான்

60 நாளைக்குள் இங்கிலீஷ்பேசவும படிக்கவும் எழுதவும் கற்றுக் கொள்வீர் தமிழ் தெரிந்தவர்களுக்கு உபாத்தியாயர் வேண்டியதில்லை. விலை ரூ. 2 0 0

### படுக்கை அறையில் பாசாங்கு

செய்த பங்கஜவல்லி விலை அணா 8.

### நிக்கல் வெள்ளி சிகார் லைட்

பீடி சுருட்டு பிடிப்பவர்களுக்கும் சமையல் செய்யும் பெண்பிள்ளைகளுக்கும் இனிமேல் நெருப்புப் பெட்டி வேண்டியதில்லை

நெ 1 விலை ரூபா 2 0 0
நெ 2 விலை ரூபா 1 0 0

உபயோகிக்கும் விதம் பார்சலுடன் அனுப்பப்படும்.

### ஜெயா கூந்தல்

வளரும் பரிமளத்தைலம் எமது தைலத்தின் குணம் அன்று மலர்ந்த மல்லிகைப் புஷ்பத்திற்கு சமானமானமாயிருக்கும்.

நெ 1 புட்டி விலை ரூபா 1 8 0
நெ 2 புட்டி விலை ரூபா 1 0 0

இதைவிட குறைந்த விலைக்கு கிடைக்கும் அதுகளை வாங்கிவிடலாகாது அந்த எண்ணெயை வாங்கி தடவினவர்கள் கூந்தல் செம்பட்டையாகவும் கூந்தல் உதிர்ந்தும் போய்விடும். வாங்கப் பிரியமுள்ளவர்கள் ஜெயாகூந்தல் வளரும் பரிமலத் தைலத்தையே வாங்குங்கள்.

---

(ரூபாவதி அல்லது சிதம்பர சாமியார், தமிழ் நாவல் விலை அணா 12)

சாமான் வேண்டியவர்கள் தங்கள் விலாசம் விபரமாய் எழுதவும்.

**இராம் அண்டு கம்பெனி,**

நெ. 47, திருப்பள்ளி வீதி, மதராஸ்.